உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.ஆ.முத்துகிருஷ்ணன்,பி.இ.,

ந.க.எண். 4113/2019/மதி2 நாள்.04 01.2021.

பொருள் : அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள், வரன்முறைப்படுத்துதல் விதிகள் 2017- மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை மாவட்டம்- மதுரை உள்ளூர் திட்டக்குழும அலுவலகம், மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், ஆண்டார்கொட்டாரம் ஊராட்சி , பாப்பாகுடி கிராமம், சர்வே எண் 2/1, 3/1, 3, 6Apart, 6Bpart, 3/8, 3/7 -ல் 7.16 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான வரன்முறை ஒப்புதல் வழங்குதல்-தொடர்பாக.

பார்வை :

1) அரசாணை(நிலை) எண்-78,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்-04.05.2017.
2) அரசாணை(நிலை) எண்-172,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்-13.10.2017.
3) அரசாணை(நிலை) எண்-21,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்-05.02.2019.
4) அரசாணை(நிலை) எண்-55,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்-03.11.2018.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்-13193/2017/எல்ஏ2,நாள்-30.10.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017, 07.01.2019 மற்றும் 28.01.2019, 05.02.2019, 21.02.2019 மற்றும் 28.03.2019.
6) மனுதாரர் திரு.K.வேல்முருகன் மற்றும் இருவர், மதுரை அவர்களின் விண்ணப்பம், நாள் 06.07.2020,12.09.2020.
7) அரசாணை எண்-100,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்- 01.07.2019.
8) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-13379/2019/TCP-2, நாள்-27.11.2019.
9) உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கடிதம் ந.க.எண்-4113/2019/மதி2,நாள்.01.12.2020
10) மனுதாரர் திரு.K.வேல்முருகன் மற்றும் இருவர், மதுரை அவர்களின் கடிதம் நாள்- 23.12.2020 (தானபத்திர எண்.4873/2020)

-----

உத்தரவு :

பார்வை(1),(2) மற்றும் (3,4)-ல் கண்ட அரசாணையின்படியும், பார்வை(5)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை(6)-ல் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை(10)-ல் கண்ட மனுதாரரின் கடிதத்துடன் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (பூங்கா) பரப்பினை உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் பெயரால் தானபத்திர மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டதினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

மதுரை மாவட்டம்- மதுரை உள்ளூர் திட்டக்குழும அலுவலகம், மதுரை மாவட்டம், கிழக்கு வட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், ஆண்டார்கொட்டாரம் ஊராட்சி , ப... கிராமம், சர்வே எண் 2/1, 3/1, 3, 6Apart, 6Bpart, 3/8, 3/7 -ல் 7.16 ஏக்கர் பரப்பளவு இ... அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ.(மு)/ம.உ.தி.கு எண்-01/2021 ... எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான வரன்முறை ஒப்... வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - | 28975.50ச.மீ |
| மொத்த மனைகள் | - | 134 எண்ணம் |
| மனை எண்கள் | - | 1--7,7பி,9--48,50--61,63--136 |
| விற்கப்பட்ட மனைகள் | - | 04 எண்ணம் |
| மனை எண்கள் | - | 1,81,82,83 |
| விற்கப்படாத மனைகள் | - | 130 எண்ணம்(13429.39சமீ) |
| மனை எண்கள் | - | 2--7,7பி,9--48,50--61,63--80,84--136 |
| பூங்கா - விற்காக ஒதுக்கிய மனைகள் | - | மனை எண் - 92,93 மட்டும் (1825.35சமீ - 10.03%) |

<u>செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்</u>:

1) பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/-வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | மனைகளுக்கு 30 மட்டும் பெறப்பட்டுள்ளது. (DTCP/L/ 0372228/2017)<br>மீதமுள்ள மனைக்கு பெறப்படவேண்டும் |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை பெற்றுக்கொண்டு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்

| மனை எண்கள் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைபடுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 45 ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக்கட்டணம் (ஒரு சதுரமீட்டருக்கு 30 ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1--7,7பி,9--48,50--61,63--91,94--136 | ------ | மனைகளின் அளவில் ஒரு சதுர மீட்டருக்கு 03.11.2019 -க்கு, பின்னர் ஒரு சதுர மீட்டருக்கு 45 ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். (ஒவ்வொரு மனைக்கும்) | ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். (ஒவ்வொரு மனைக்கும்) |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு

| | |
|---|---|
| 0217.Urban Development –60 Other Urban Development Scheme–800.Other receipts AT Receipts under Regularization charges of Unapproved layout and Plots – DTCP 27 Non Taxation Fees- 30 Regularization.(DPC 0217 60 800 AT 2730.) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

கட்டணம் கீழ்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.
மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

5 நிபந்தனைகள்:

அரசாணை எண்-172,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்-13.10.2017-ல் விதி எண். 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான வரன்முறை ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3) பார்வை(6)-ல் கண்ட அரசாணையின்படியும் மற்றும் பார்வை(7)-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களது கடிதத்தின்படியும், உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு மனுதாரர் மூலம் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (பூங்கா) பரப்பினை தானபத்திர எண்.4873/2020, நாள்-19.12.2020-ன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 6-ல் கண்ட அரசாணைப்படி இப்பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு உறுப்பினர் செயலரால் ஒப்படைக்கப்படும்.

4) தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (பூங்கா) அளவுகளில் வேறுபாடு இருப்பின் முழுப் பொறுப்பும் மனுதாரரையே சாரும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

4-1-2021

உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

04/01/2021

இணைப்பு :
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.
(ஒரு வரைபடம் மனுதாரருக்கு உள்ளாட்சி மூலமாக)

பெறுநர் : வட்டார வளர்ச்சி அலுவலர்,(கி.ஊ)
மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்,
மதுரை.

நகல் : (வரைபடத்துடன்)

| | |
|---|---|
| 1) உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மதுரை மாவட்டம். | உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு |
| 2) சார்பதிவாளர், தல்லாகுளம் சார்பதிவாளர் அலுவலகம், மதுரை. | உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு |

3) தொழில் நுட்ப வைப்பறை - 1வரைபடம்.

4) மனுதாரர் (உத்திரவு மட்டும்)

Thiru.R.Velmurugan and 02 Others,
No.15. Corporation Colony, K.K.Nagar, Madurai - 625020.

R. Velmurugan

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு. வே.உ. குமார்.

ந.க.எண்: 0083/2021/கி3 நாள் .04.2021

பொருள்: மனைப்பிரிவு - மதுரை மாவட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் வரன்முறை படுத்தப்படாத தனித்த மனைப்பிரிவுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கிட தெரிவிக்கப்பட்டது வரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்: 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை நாள்: 04 05 2017.
2. அரசாணை (நிலை) எண்: 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை, நாள்: 13.10.2017
3. அரசாணை (நிலை) எண்: 21 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்: 05.02.2019.
4. அரசாணை (நிலை) எண்.16 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(ந.வ.-4)துறை நாள்: 25.01.2021
5. உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மதுரை ந.க.எண்: 4113/2019/மதி 2, நாள்: 04.01.2021.
6. ம.வ (மு) / ம.உ.தி.கு.எண். 01/2021 நாள் 04.01.2021.
7. திரு.R.வேல்முருகன், த/பெ.ராமச்சந்திரன், க.எண்.15, கரும்பாலை கார்ப்ரேசன் காலனி, மதுரை–625020. என்பவரின் மனு நாள் 15.03.2021.

---

ஆணைகள் :-

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், ஆண்டார்கொட்டாரம் ஊராட்சிக்குட்பட்ட, பாப்பாகுடி கிராமத்தில் உள்ள வரன்முறைப்படுத்தப்படாத தனித்த மனையினை அரசு விதிமுறைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து கொடுக்கும் பொருட்டு அரசு விதிகளின்படி அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்தியுள்ளேன். எனவே, எனது மனையினை வரன்முறை செய்து கொடுக்குமாறு பார்வை 6ல் காணும் மனுவில் கோரப்பட்டது. மனுதாரர் செலுத்திய கட்டண விபரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 13193/2017/எல்.எ.1, நாள்: 21.02.2019-ன்படி | கூர்ந்தாய்வுக் கட்டணம் | ICICI Bank, K.K.Nagar Branch Madurai D.D.No 507631 Date 17.04.2021 | 16000 |
| 1 | G.O.(MS).No: 21 Housing Urban Development (UD4(3) Department, dated 05.02.2019-ன்படி | வரன்முறை கட்டணம் | Sub Treasury Madurai North SBI Tallakulam Branch Madurai Challan No 171 Date 17.04.2021 & Ch.No.10 dt.21.04.2021 | 7,36,695 |
| | | வளர்ச்சிக் கட்டணம் | ICICI Bank, K.K.Nagar Branch Madurai D.D.No 507630 Date 17.04.2021 & SBI CTO Complex D.D.No.545288 dt.21.04.2021 | 4,91,130 |

| | |
|---|---|
| ரீசர்வே எண் | 2/1, 3/1, 3, 6Apart, 6Bpart, 3/8, 3/7 |
| மனைஎண் | 2-7, 7பி, 9-48, 50-61, 63-80, 84-91, 94-136 (மொத்தம் -128) |
| சதுர மீட்டர் | 16370.58 |
| பூங்காவிற்காக ஒதுக்கிய மனைகள் | 92, 93 (10.03 % = 1825.35) |

எனவே மேற்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி வரன்முறைப்படுத்தப்படாத மனைப்பிரிவில் அமையும் தனிமனையினை கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1 கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை, கொள்கை அளவில் அரசாணையின் படி ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நிலஉரிமை ஆவணங்களின் அடிப்படையில் ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி

மாறும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும். மேலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி தங்களின் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3 மனைப்பிரிவின் சாலைகள் அனைத்தும் கொள்கையளவிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி பதிவுத்துறையில் செயல் அலுவலர் / ஊராட்சி மன்றத் தலைவர், **ஆண்டார்கொட்டாரம் ஊராட்சி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம்** என உள்ளாட்சியின் அபிவிருத்திக்கு பதிவ செய்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

4 அரசாணை (நிலை) எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்: 13.10.2017-ல் உள்ள விதி எண் 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், அணுகுசாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (Open Space Reservation for Land) (OSR) இடங்கள் தொடர்புடைய உள்ளாட்சியின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டதில் நில அளவைகளில் மாற்றம் இருப்பின் உரிய அரசாணைகளின்படி தங்கள் மீது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5 மனைப்பிரிவின் மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் ஆய்வின் போது காட்டப்பட்டதில் மாற்றம் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி தங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

6 இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எந்த துறையின் மூலமும் எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச்சட்டம் மற்றும் நில சீர்திருத்தச்சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதி மொழி சான்று வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

7 தாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரியவந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

8 தாங்கள் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் பிற தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

9 தாங்கள் சமர்பித்த ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு உள்ளாட்சி விதிகளின்படி உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10 தங்களது மனைகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படக்கூடாது.

11 வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டிறியபட்டால் திட்ட அனுமதி இரத்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் உரிய சட்டரீதியான நடவடிக்கை தங்கள் மீது எடுக்கப்படும்.

12 மனைக்கு சாலைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடமானது ஊராட்சி நிர்வாகத்தினால் தீர்மானம் இயற்றப்பட்டு, சாலைக்கான இடம் கையப்படுத்தும் நிகழ்வில், எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்க இயலாது. அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கும் நிகழ்வில் இவ்வுத்தரவு ரத்து செய்யப்படும்.

13 தாங்கள் சமர்பித்துள்ள ஆவணங்கள் உண்மைக்கு புறம்பாக இருப்பின் அரசு சட்ட விதிகளின்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14 மனையின் நடுவே உயர் / குறைந்த அழுத்த மின் கம்பி பாதை செல்லுமாயின் அதன் போக்கை சாலையின் போக்கில் மனுதாரர் மின் வாரியத்தை தொடர்பு கொண்டு, தனது சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.

15 மனையிடத்தினை சுற்றிலும் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
மதுரை கிழக்கு

பெறுநர்

திரு.R.வேல்முருகன், த/பெ. ராமச்சந்திரன், க.எண்.15, கரும்பாலை கார்ப்ரேசன் காலனி, மதுரை–625020

நகல்

1. ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலர், **ஆண்டார்கொட்டாரம்** ஊராட்சி.

நகல் பணிந்து அனுப்பப்படுகிறது:-

1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மதுரை
2. உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை.
3. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் ஆவணங்கள் துறை, மதுரை.
4. இருப்பு கோப்பு.